# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண் 1336/2017/பே.**

**ஆணை எண். 35 /2018/நாள். 12–03–2018**

**திருமதி. எம். சுமதி,**
**த/பெ. லேட் முனியாச்சாரி,**
**18/52 ஏ, சன்னதி தெரு,**
**சோளிங்கர் – 631 102,**
**வேலூர் மாவட்டம். --- முறையீட்டு மனுதாரர்.**

**செயல் அலுவலர்,**
**சோளிங்கர் பேரூராட்சி,**
**வேலூர் மாவட்டம். --- எதிர் மனுதாரர்.**

**ஆணை**

திருமதி. M. சுமதி, த/பெ திரு. முனியாச்சாரி, 18/52–A, சன்னதி தெரு, சோளிங்கர், வாலாஜா தாலுக்கா, வேலூர் மாவட்டம் அவர்களின் 22.09.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2017ல் பெறப்பட்டு முறையீட்டு மனு எண் 1336/2017 ஆக எண்ணிடப்பட்டது. முறையீட்டு மனு மீது அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

திருமதி M. சுமதி, தனது முறையீட்டு மனுவில் தான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருவதாகவும், தனது தாயார் திருமதி கண்ணம்மாள் அவர்கள் சோளிங்கர் சார் பதிவாளர் அலுவலகத்தில் வீட்டின் முன்பாகம், செட்டில்மெண்ட் ஆவணம் 289/2014 நாள் 30.01.2014 ன் மூலம் தனது பெயருக்கு பதிவு செய்யப்பட்டு தன்னுடைய பொறுப்பில் உள்ளதாகவும், இது சம்பந்தமாக மேற்படி சொத்திற்கு புதிய வீட்டு வரி விதிப்பு செய்ய சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு 05.06.2017ல் மனு செய்ததாக தெரிவித்துள்ளார். இதனைத் தொடர்ந்து மாண்பமை உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்ததின்

அடிப்படையில் முறைமன்ற நடுவ ஆணை எண் 135/2017/நாள 30.05.2017ன் மூலம் மேற்படி மனுதாரருக்கு உரிய இடத்தினை அளந்து புதிய வரி விதிப்பு செய்ய ஆணையிடப்பட்டும், சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் மேற்படி வரி விதிப்பினை செய்து தரவில்லை எனக்கூறி முறைமன்ற நடுவத்தின் ஆணையினை செயல்படுத்தாத சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி தனது மனுவினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நீதிமன்ற வழக்கு நிலுவையில் உள்ள இப்பொருள் தொடர்பாக இம்முறைமன்ற நடுவ ஆணை எண்.135/2017 நாள் 30.05.2017ல் 2014 ஆம் அண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 உட்பிரிவு 3 (b) ன் கீழ் இம்முறைமன்ற நடுவம் விசாரணைக்கு உகந்ததல்ல என தெரிவித்தும் மேற்படி நீதிமன்ற வழக்கு தீர்ப்பின் அடிப்படையில் உரிய ஆவணங்களை ஆய்வு செய்து தகுந்த நடவடிக்கை எடுத்திட சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரை வலியுறுத்தியும் ஆணையிடப்பட்டுள்ளது.

இருப்பினும் இது சம்பந்தமாக இம்முறைமன்ற நடுவ 11.10.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி சொத்து சம்பந்தமாக சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் O.S. No. 37/2014 வழக்கின் தற்போதைய நிலையினை தெரிவிக்கக் கோரி சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 477/2013/23.10.2017ன்படி தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

வேலூர் மாவட்டம், சோளிங்கர் பேரூராட்சி வார்டு எண் 12 க்குட்பட்ட சன்னதி தெருவில் கதவு எண் 18/52-A ல் வசிக்கும் திருமதி எம். சுமதி, த/பெ லேட் முனியாச்சாரி என்பவர் தனது குடும்ப சொத்து வரி, பெயர் மாற்றம், மற்றும் புதிய வரி விதிக்கக் கோருவது சம்பந்தமாக தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் குடும்பத்தாரர்களால் வழக்கு தொடரப்பட்டு வழக்கு எண். O.S.No. 37/2014 ல் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேலும் இவ்வழக்கு சம்பந்தமாக நேரில் விசாரித்தமைக்கு நாளது வரை நிலுவையில் உள்ளதாகவும், பேரூராட்சி செயல் அலுவலர், சோளிங்கர் தெரிவித்துள்ளார். மேலும் மேற்படி வழக்கின் தன்மையை பொருத்து மாண்பமை நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்படும் உத்திரவின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 07.12.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி வழக்கின் நிலை குறித்தும், புகாரிலுள்ள சொத்து பாகப்பிரிவினை மற்றும் விவரங்களின்படியான விவரங்களை தெரிவிக்கக் கோரி சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தனது கடித ந.க.எண். 477/2013/நாள் 28.12.2017ன் படி தனது அறிக்கையினை கீழ்கண்டவாறு சமர்ப்பித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரர் 05.06.2017ன்படி தனக்கு எழுதி தரப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி விரிவிதிப்பு செய்யக் கோரியுள்ளதாகவும், மேற்படி சொத்தானது குடும்ப நபர்களால் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

திருமதி M. சுமதி தனது குடும்பத்தின் சொத்து குறித்து சர்வே எண் 1069/B/5 நத்தம் 1350/4ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் இதன் அடிப்படையில்தான் அறிக்கை

'சமர்ப்பித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். அறிக்கையில் குறிப்பிட்ட சொத்து திரு சேகர் என்பவருக்கு 24.09.2009ல் ஒரு பகுதி சொத்தும், திருமதி எம். சுமதி என்பவருக்கு மறு பகுதி சொத்தும் 30.01.2014ல் சோளிங்கர் சார் பாதிவாளர் அலுவலகத்தில் பத்திரம் பதிவு செய்யப்பட்டதாகவும், சொத்து பிரித்து கொடுத்த பின்னர் 09.04.2014ல் சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீரிமன்றத்தில் 09.04.2014ல் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கு சோளிங்கர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் O.S.No.37/2014 எண்ணில் தொடரப்பட்டுள்ளதாகவும், இவ்வழக்கிற்கான விவரத்தினை இணையதளம் மூலம் பெறுவதற்கு நீதிமன்ற குறியீட்டு எண் 1000 என சேர்த்து வழக்கு எண்ணான 37ஐ சேர்த்து பதிவு செய்தால்தான் வழக்கின் நிலையினை அறிய இயலும் எனவும் மேலும் மேற்படி வழக்கு தற்போதுதான் Trail க்கு வருவதாகவும் தெரிவித்தள்ளார். மேற்படி குடும்ப சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளதால் நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தனது அறிக்கையில் சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தொடர்ந்து இம்முறைமன்ற நடுவ 02.02.2018ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்படி சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரின் 28.12.2017ம் நாளிட்ட அறிக்கையின்நகலினை திருமதி M. சுமதி அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு மேற்படி அறிக்கையின் மீதான விளக்கம் / ஆட்சேபணையினை ஒரு வார காலத்திற்குள் தெரிவிக்கக் கோரி ஆணையிடப்பட்டது. ஆனால் நாளது தேதி வரை மேற்படி முறையீட்டு மனுதாரரிடமிருந்து எவ்விதமான விளக்கமோ/ஆட்சேபணையோ பெறப்படவில்லை.

எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரர் மேற்படி சோளிங்கர் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கையின் மீதான விளக்கம்/ஆட்சேபணை ஏதும் தெரிவிக்காத நிலையில் தான் கூறிக்கொள்ள விளக்கம் ஏதுமில்லை எனக் கருதி மேற்படி முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு மார்ச்திங்கள் 12 -ஆம் நாள் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

-//ஒப்பம்//-

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

**-//உத்திரவின்படி / அனுப்பப்படுகிறது//-**

செயலாளர்.

பெறுநர்

1.திருமதி. எம். சுமதி,
த/பெ. லேட் முனியாச்சாரி,
18/52 ஏ, சன்னதி தெரு,
சோளிங்கர் – 631 102,
வேலூர் மாவட்டம்.

2.செயல் அலுவலர்,
சோளிங்கர் பேரூராட்சி,
வேலூர் மாவட்டம்.

3.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
வேலூர்.